1981 ஏப்ரல் 27]

நீதிபதி ஒருவர் விடுப்பில் சென்றால் மாற்றுவசதியில்லாமல்—நீதிபதிகள் தேர்வு நடந்து கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது. தற்போது உயர்நீதி மன்றத்திற்கு கீழேயுள்ள டிஸ்ட்ரிக்ட் முன்சீப் தேர்வு நடத்தப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்படும். அப்போது இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும்.

திருத்தணியில் நீதிமன்றங்களுக்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

* வினா எண் 894.—திரு. பூ. மு. நாகிம்மன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் திருத்தணியில் உள்ள மாவட்ட முன்சீப், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஆகிய இரு நீதிமன்றங்களுக்கும் நிரந்தர கட்டிடம் கட்ட அரசின் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் கட்ட எப்போது பணி துவங்கும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. கோபால் : அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதாகக் கூறினார்கள். திருத்தணியில் உள்ள மாவட்ட முன்சீப், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஆகிய நீதிமன்றங் களுக்கு புதிதாக ஒரு கட்டடம் கட்டித்தரவேண்டும் என்று பொதுமக்களிட மிருந்தும் வழக்கறிஞர்களிடமிருந்தும் பத்தாண்டுகளாகவே கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் நலன் கருதி அங்கே அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதன் தேவை மிகவும் இன்றி யமையாத ஒன்று என்பதை அரசாங்கம் உணர்ந்து ஏற்றுக்கொண்ட காரணத்தால்தான் உயர்நீதிமன்றத்தினிடம் அதுகுறித்து ஒரு அறிக்கை கேட்டு அறிக்கையும் பெற்றிருக்கிறது. ஆனால் தகுதியான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று அந்த இடத்தை தேர்ந்தெடுக்கும் பணி பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த இடம் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்தி புதிய இடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கான எஸ்டிமேட்ஸ் தரும்படி உயர்நீதி மன்றமும், பி.டப்ளியூ.டி.-யும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன, அது வந்தவுடன் இது நடைமுறைப்படுத்தப்படும்.

[1981 ஏப்ரல் 27

(முற்பகல் 9-30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய அரசை மாநில அரசு நிதி உதவி கோரியிருக்கிறதா ? ஆம் எனில், அந்த நிதி உதவியைப் பெற்று, வாடகைக் கட்டிடங்களில் இல்லாமல், தமிழகம் அனைத்திலும் நீதி மன்றங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபார்டினேட் ஜுடிஷியரி சர்வீசைப் பொறுத்த வரையில் after the 42nd amendment of the Constitution அவைகள் கன்கரென்ட் லிஸ்டிலே சென்றுவிட்ட பிறகு, இது கன்கரென்ட்லிஸ்டிலே இருக்கின்ற காரணத்தினால், இந்த நீதிமன்றங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கவில்லை. அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மைய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. அதன் அடிப்படையில் பார்த்தால், இந்தத் துறை கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப் பட்டு, இந்த நீதித் துறையை விரிவுபடுத்துவதற்கு சுமார் 20-லிருந்து 25 கோடி தேவையெனக் கருதப்படுகிறது. மைய அரசுக்கு இந்தப் பணத்தைத் தர வேண்டுமென்று மாநில அரசு கேட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை தமிழகத்திற்கு மட்டுமல்ல ; மற்ற மாநிலங்களுக்கும் இருக்கின்ற காரணத்தினால், தென் மாநிலங்களின் சட்ட அமைச்சர்கள் மாநாடு அடுத்த மாதம் நடக்க விருப்பதால், இந்த மாநாட்டின் மூலம் கூட மைய அரசை மாநில அரசுகள் வலியுறுத்த இருக்கின்றன.

பெரியார் மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 895.—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே இருந்து தனியாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம் இது. ஒவ்வொரு மாவட்டத்திலும், தலைநகரில் மத்திய சிறைச்சாலை இருக்கின்ற காரணத்தினால், பிரிக்கப்பட்ட இந்த பெரியார் மாவட்டத் தலைநகரத்தில் மீண்டும் மறுபரிசீலனை செய்து மத்திய சிறைச்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?